# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முறையீட்டு மனு எண்: 168/2017

ஆணை எண் 243 /2017/நாள் 05 –10–2017

திரு. மா. ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு,
பொத்தனூர் – 638 181,
நாமக்கல் மாவட்டம் -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம் – 638 182 -- எதிர் மனுதாரர்

ஆணை

திரு மா.இராஜசேகரன், 27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் அவர்களது 13.04.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.04.2017 ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 168/17 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு மா. இராஜசேகரன், தனது முறையீட்டு மனுவில், நாமக்கல் மாவட்டம், வேலூர் தேர்வு நிலை பேரூராட்சியில் இயங்கி வரும் பல்வேறு மளிகை கடைகள், பல்பொருள் அங்காடிகள், காய்கறி கடைகள், மருத்துவமனைகள், பைப் தயாரிக்கும் நிறுவனங்கள், கணினி மையங்கள், பயிற்சி நிறுவனங்கள், டுடோரியல் காலேஜ்கள், மற்றும் விடுதிகள் உள்ளதாகவும், இந்நிறுவனங்களுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு விதிகளின்படி நிறுவனம் செயல்பட அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மற்றும் இந்நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய தொழில் வரிகள் வசூலிக்கப்பட்ட விவரங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரியும், மேற்படி பொருள் குறித்து பேரூராட்சி செயல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ தகவல்கள் கோரியதாகவும், அதற்கு செயல் அலுவலர் எந்தவிதமான

முறையான பதிலும் அளிக்கவில்லை எனவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்து இது குறித்து நடவடிக்கை எடுக்க கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டிற்கு செயல் அலுவலர், வேலூர் தேர்வு நிலை பேரூராட்சி அவர்களின் கடித எண் 38/2017/அ.1 நாள் 04.08.2017 மற்றும் கடித எண் 68/2017/நாள் 0509.2017 ஆகியவற்றில் தனது விளக்கத்தினை அளித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் தொடர்பாக மேற்கண்டவாறு வரப்பெற்ற வேலூர் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கங்களடங்கிய கடிதங்களின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றன. முறையீட்டு மனுதாரர் தொழில் வரி நிர்ணயிக்கப்படாமல் உள்ள நிறுவனம் / அமைப்பின் பெயர், முகவரி போன்ற குறிப்பான கோரிக்கை விவரங்களுடன் தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்தால் உரிய நடவக்கை எடுக்கப்படும் என தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

மேலும் தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 ன்கீழ் செயல் அலுவலரிடம் தகவல்கள் கோரியது தொடர்பாகவும், அது தொடர்பான முறையீடுகள் குறித்தும், தகவல் அறியும் உரிமை சட்டம் பிரிவுகளின்படி சம்பந்தப்பட்ட மேல் முறையீட்டு அலுவலருக்கே முறையீடு செய்து கொள்ளவேண்டுமெனவும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

இணைப்பு 2 கடிதங்கள்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-// உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//-

செயலாளர். (FAC)

பெறுநர்

1.திரு. மா. ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு,
பொத்தனூர் – 638 181,
நாமக்கல் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
வேலூர் தேர்வு நிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்